<table>
<tr><td colspan="2">DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai</td></tr>
<tr><td colspan="2">Date: 26.11.2025</td></tr>
<tr><td colspan="2">CC.No. 5/2023</td></tr>
<tr><td colspan="2">சாட்சி : PW5</td></tr>
<tr><td>பெயர் : திரு.மணி</td><td>ஜாதி :</td></tr>
<tr><td>த/பெ/க/பெ. : திரு. சின்னராஜ்</td><td>தொழில் : விவசாயம்</td></tr>
<tr><td>கிராமம் : விடத்திலாம்பட்டி</td><td>சமயம் :</td></tr>
<tr><td>தாலுக்கா :</td><td>வயது : 43 /2025</td></tr>
<tr><td colspan="2">( எதிரிகள் ஆஜர் வழக்கறிஞர் ஆஜர் )</td></tr>
</table>

-----------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஐ, 1ம் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்த பின்னர் நகை பத்தவில்லை என்று சொல்லி நகை வாங்கி வருமாறு வரதட்சணை கொடுமை செய்துள்ளார் என்று கிரித்திகா அவரது அம்மாவிடம் அழுது கொண்டு சொல்லிக்கொண்டிருந்தபோது நான் அருகில் இருந்து கேட்டேன். மீண்டும் அவரது அம்மா அவரை 1ம் எதிரியின் வீட்டில் வாழுமாறு அறிவுறுத்தியன் பேரில் வாழ்ந்து வந்தார். மீண்டும் அதே நகை, பணம் கேட்டு கொடுமைப்படுத்தி மண்ணெய் ஊற்றி எரித்துவிடுவதாக சொல்லி மிரட்டியதாக கிரித்திகா அவரது அம்மாவிடம் சொல்லி அழுதுகொண்டிருந்தபோது நான் அருகில் இருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். அதன்பிறகு கிரித்திகா புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**2.** கிரித்திகா எனது ஊரை சேர்ந்தவர் என்றால் ஆமாம். அவர் மணப்பாறை, ராஜீவ்நகரில் தான் குடியிருந்தார் என்றால் ஆமாம். ராஜீவ்நகரில் எந்த விலாசத்தில் எந்த கதவு எண்ணில் எதிரிகளும், அ.சா.1 வாழ்ந்தார்க்ள் என்று எனக்கு தெரியாது. அ.சா.1 க்கும், எதிரிக்கும் எந்த தேதியில் திருமணம் நடைபெற்றது என்றும் என்னென்ன சாமான்கள் கொடுத்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 க்கும், எதிரிக்கும் எத்தனை

குழந்தைகள் இருக்கிறார்கள், அந்த குழந்தை எந்த வயதில் இருக்கிறது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பத்து வயதில் ஆண் குழந்தை உள்ளது. பணம், நகை எதிரி, அ.சா.1 டம் கேட்டதாக சொல்லும் விபரத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. அ.சா.1 என்பவர் எதிரிகள் பணம் கேட்டதாக சொல்லி அழுதாத சொல்லும் சம்பவம் எந்த தேதியில் எங்கு நடந்தது என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

3. அ.சா.1 ம், எதிரியும் எத்தனை வருடம் வாழ்ந்தார்கள், எப்போது பிரிந்தார்கள், எப்போது சேர்ந்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பெயரை போலீசாரிடம் மேற்படி கிரித்திகா என்பவர் தான் கொடுத்தார். நான் போலீசாரிடம் எனது தகப்பனார் பெயரையோ, என்ன நடந்தது என்பது பற்றி மகளிர் காவல்நிலையத்தில் எதுவும் சொல்லவில்லை என்றால் ஆமாம். மேற்படி நீதிமன்றத்தில் நான் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் அ.சா.1 போலீசாரிடம் சொன்னாரே தவிர நான் நேரடியாக போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் ஆமாம். எனக்கு எந்த சம்பவமும் தெரியவில்லை என்றும் அ.சா.1 உள்ளூர் என்பதாலும் வேண்டியவர் என்பதாலும் அவர் கேட்டுகொண்டதிற்கிணங்க கேள்விபட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.